1995 நவம்பர் 8]

முற்பகல் 11-15

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *6-11-95* அன்று நடந்த சம்பவம் பற்றி இப்போது எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நீங்கள் கொடுத்திருக்கிற ஒரு உரிமைமீறல் பிரச்சினைக்கு அனுமதி மறுத்து உங்களுக்குப் பதில் அனுப்பியிருக்கிறேன். (குறுக்கீடு) கேளுங்கள். (குறுக்கீடு). அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்புகள்--புதியதாக எதுவும் அறிவிக்க இருப்பது' பற்றி வெளியே தெரிவிக்கப்பட்டது, உரிமைப் பிரச்சினையாக பலமுறை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் கொடுத்து இருக்கிற பிரச்சினை புதிய அறிவிப்பு போல் ஒன்றுமில்லை, (குறுக்கீடு) கேளுங்கள். அதுதவிர, இந்தச் சட்டமன்றத்தில் ஒரு மசோதா கொண்டு வர இருக்கிறோம் என்று சொல்வது சட்டமன்றத்தை முன்னிலைப்படுத்திப் பேசிய பேச்சுதானே தவிர, சட்டமன்றத்திற்குள்ளே ஒரு மசோதா கொண்டு வர இருக்கிறோம் என்று பேசுவதையே உரிமை மீறல் பிரச்சினை என்று சொன்னால் அது சரியல்ல. (குறுக்கீடு) முன்னிலைப்படுத்தித்தான் அவர் பேசி இருக்கிறார். அதற்கு மேல் இன்னொன்றையும் சொல்கிறேன், (குறுக்கீடு) கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது (குறுக்கீடு) இந்த அவையிலேயே *25-4-1995* அன்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். "அடுத்து லா யுனிவர்சிட்டி-சட்டக்கல்வி-அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (குறுக்கீடு) இந்தியாவிலேயே சட்டப் பல்கலைக்கழகம் பெங்களூரில் ஒன்று இருக்கிறது; அடுத்து நம்முடைய தமிழ் மாநிலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவியின் முயற்சியால் வரும் என்று சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவித்தேன்; அதற்கு ஸ்பெஷல் ஆஃபீஸராக அதாவது ஹையஸ்ட் சீனியர் ஆபீஸர் திரு. ஏ. பால்ராஜ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்; அவர் அறிக்கை கொடுத்துவிட்டார். அடுத்து ஒரு தனி அதிகாரி திரு. பி. முருகன்; அவர் முன்னாள் டெபுட்டி செக்ரட்டரி, லா டிப்பார்மென்ட்; அவர் சட்டப் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட வரைவு சட்டமுன்வடிவை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். இதை இந்தச் சட்டமன்றத்தில் நாங்கள் மசோதாவாகக் கொண்டுவர இருக்கிறோம்" என்று பேசி இருக்கிறார். எனவே, சட்டமன்றத்தில் சொல்லாதது

எதையும் வெளியே சொல்லவில்லை. (குறுக்கீடு) சட்டமன்றத்தில் சொன்னதைத்தான் வெளியே பேசி இருக்கிறார். (குறுக்கீடு) சட்டமன்றத்தில் சொன்னதுதான். அவை நடவடிக்கையில் இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திற்குள் சொன்னதை வெளியே சொல்லக்கூடாது என்று ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அடுத்து 1957-ல் ஜில்லா போர்ட் என்றிருந்ததே, அதை ஒழிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்தபோது சட்டமன்றம் நடந்துகொண்டிருந்தது. அப்படி சட்டமன்றம் நடந்துகொண்டிருந்தபோது உள்ளாட்சித்துறை அமைச்சர் வெளியே சொன்னார் என்று ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அப்போது பேரவைத் தலைவர் அதுபற்றிச் சொல்கிறபோது, ஒரு கொள்கை அறிவிப்பாக மட்டும் வெளியே அறிவித்திருந்தால் அது உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று சொல்லிவிட்டு "Even in that statement, it is stated that the Minister for Local Administration will make a statement when the Demand for Local Administration is moved.." என்றுதான் அப்போது தெரிவித்திருக்கிறார். எனவே அது உரிமை மீறல் பிரச்சினை அல்ல என்று அன்றைய பேரவைத் தலைவரும் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அதாவது ஜில்லா போர்டை ஒழிக்கப் போகிறோம் என்பது பற்றி சட்டமன்றத்தில் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது நான் அறிவிப்பு வெளியிடுவேன் என்று வெளியே சொல்லியிருக்கிறார். அது உரிமை மீறல் பிரச்சினை இல்லை என்று 1957-லேயே முடிவாகி இருக்கிறது. (குறுக்கீடு) இப்போதும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். நான் மசோதா கொண்டுவர இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) ஜில்லா போர்டை ஒழிக்க இருக்கிறோம். அதுபற்றிய அறிவிப்பை என்னுடைய மானியக் கோரிக்கையில் வெளியிட இருக்கிறேன் என்றுதான் அப்போது சொல்லியிருக்கிறார். உரிமை மீறல் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இது உரிமை மீறல் பிரச்சினையாக வராது, எனவே நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) இங்கே சட்டமன்றத்திற்குள் நாங்கள் கொண்டுவர இருக்கிறோம் என்று சொல்வது உரிமை மீறல் பிரச்சினையாக வராது. இங்கே கொண்டுவர இருக்கிறோம் என்று உங்களை முன்னிலைப்படுத்துவதில் உங்களுக்கு என்ன ஆதங்கம்? (குறுக்கீடு) அப்படி அல்ல என்று நீங்கள் சொல்லலாம், உட்காருங்கள்.